தயாரிக்கும் திட்டம் ஆகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதையும் கவனத்தில்கொண்டு, வருங்காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப அதைச் செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆ. தமிழரசி அவர்கள்.

திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றிகூறி, வருகின்ற ஆண்டிலேயே திருப்புவனம் பேரூராட்சியிலும், இளையான்குடி பேரூராட்சியிலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, சொல்லியிருக்கிறேன். அரசு ஆய்விற்கு எடுத்து, நிதி நிலைமைக்கேற்ப அதனைச் செய்வதற்கு ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரத்தை சரியாக 10–45 மணிக்குள் முடிக்கவேண்டும். ஆகவே, கேள்வி–பதில் இரண்டுமே, சுருக்கமாக இருக்கும்படி எல்லோரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

152—

மகளிர் கலைக் கல்லூரி

***62949—திரு. இராம. கருமாணிக்கம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, தொண்டி பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவாடனை தொகுதி, தொண்டி அமைந்துள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில், எட்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் கல்லூரியும் மற்றும் 13 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவற்றை தவிர, அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி ஒன்றும் 3 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரியும் மற்றும் 2 சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/ மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவாடனை தொகுதி, தொண்டி பகுதியில் மகளிர் கலைக் கல்லூரியைத் துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம் அவர்கள்.*

திரு. இராம. கருமாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டி, இஸ்லாமிய மக்கள் அதிகமாக வாழக் கூடிய பகுதியாகும். இங்கு பெண்கள் படிப்பதற்குப் போதிய வசதிகள் இல்லை. ஆதலால், இங்கு மகளிர் கல்லூரி அவசியம் தேவைப்படுகிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்பு இதே துறையில் அமைச்சராக இருந்தபோது தொண்டிக்கு ஒரு கல்லூரி வேண்டுமென்று, அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு ஒரு பரிந்துரைக் கடிதம் அனுப்பி இருந்தார்கள். ஆதலால், தொண்டிக்கு அவசியம் ஒரு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத்தர வேண்டுமென்று தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியில் மட்டும் 2 அரசு கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்தெந்த தொகுதிகளில் அரசு கலைக் கல்லூரிகள்*

இல்லையோ, அந்தத் தொகுதிகளுக்கு, முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தொகுதியைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இரண்டு அரசு கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அந்த இரண்டு அரசு கலைக் கல்லூரிகளில் மொத்தமுள்ள 3,069 இடங்களில் 2,456 இடங்கள்தான் நிரப்பப்பட்டிருக்கின்றன. அங்கே 613 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தக் கல்லூரிகளிலே இருக்கிற காலி இடங்களிலே, மாணவர்களை நிரப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வருகிற காலங்களில் நிதி நிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும். இப்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அதற்கேற்ப ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம. கருமாணிக்கம் அவர்கள்.

திரு. இராம. கருமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் நலனுக்காகப் பல நல்ல திட்டங்களை அளித்துவரும் இந்த அரசு, தொண்டி பகுதிக்கு மகளிர் கல்லூரியை விரைந்து தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாக மீண்டும் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற புதுமைப் பெண் திட்டத்தின் மூலமாக அரசுப் பள்ளிகளிலே படித்த மாணவிகள் பெரும்பாலும் கல்லூரிகளிலே சேருவதற்கு வாய்ப்பைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். அவர்களுக்கான வாய்ப்புகளும் ஆங்காங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவர்களுக்குத் தனியாகக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. தற்போது இருக்கிற மாணவர்கள் அந்த இரண்டு கல்லூரிகளிலேயும் சேர்ந்து பயில்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, இந்த அரசு நிச்சயமாக வருங்காலங்களிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.